**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 33/2025**
**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சிவக்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முருகன்** | **Calling** | : | **ஆட்டோ ஓட்டுநர்** |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **40** |
| | | | **Dated** | : | **17.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**5 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 4), **திரு. சிவக்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. இவ்வழக்கின் மற்ற எதிரிகளான மாதவன், விக்னேஷ், கார்த்திகேயன், முகேஷ்குமார் ஆகியோரையும் தெரியாது. அசா. 2 செந்தில் குமாரை எனக்குத் தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் அழைத்தன்பேரில் நீதிமன்றத்திற்கு வந்தேன். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

கடந்த 25.07.2022ம் தேதி மாலை 04.30 மணிக்கு ஆட்டோ ஸ்டாண்டில் நான் இருந்தேன் என்றும், இந்த வழக்கின் அசா. 2 செந்தில்குமாரை அன்றைய தினம் 04.15 மணிக்கு அசா. 2 ராமபிள்ளை தோப்பு அருகில் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தார்கள் என்றும், அசா. 2 செந்தில்குமாரைப் பார்த்து அழகர் எங்கே என கேட்டதாகவும், ஏன் கேட்கிறீர்கள் என்று அசா. 2 செந்தில்குமார் கேட்டதற்கு, எங்க லிஸ்டில் அழகர் மட்டும் தப்பிவிட்டார் என்றும் சொன்னதாகவும், இதனை அழகரிடம் அசா. 2 செந்தில்குமாரிடம் சொல்லப்போவதாகவும் சொன்னதற்கு, வழக்கின் எதிரிகளில் விஸ்வா, பரத், பிரவீன்குமார் ஆகியோர் அசா. 2 செந்தில்குமாரைப் பிடித்து இழுத்து வந்ததாகவும், மாதவன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அசா. 2 செந்தில்குமாரின் மூக்கில் வெட்டி காயத்தை ஏற்படுத்தியதகாவும், விக்னு என்ற விக்னேஷ் அருவாளால் தலையை நோக்கி வெட்டியபோது, வலது கையால் அசா. 2 செந்தில்குமார் தடுத்ததால் அவருக்கு வலது மணிக்கட்டில் வெட்டுப்பட்டதாகவும், மீண்டும் தலையில் வெட்டியபோது, இடது கையால் தடுத்தபோது, இடது மணிக்கட்டில் வெட்டுப்பட்டதகாவும், கார்த்திகேயன் என்பவர் தனது கையில் வைத்திருந்த கத்தியால் அசா. 2 செந்தில்குமாரின் கண்புருவத்தில் மாறி, மாறி குத்தியதால் காயமானதாகவும், முகேஷ்குமார் கத்தியால் வலது முன் காலில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும், அருகில் இருந்தவர்கள் வரவே மேற்படி

எதிரிகள் மோட்டார் சைக்கிள்களில் ஏறி தப்பி சென்று விட்டதாகவும், பின்னர் காயம்பட்ட அசா. 2 செந்தில்குமாரை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 17.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.17 18:44:52 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.